முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1028

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.07.2022, சனிக்கிழமை

1. பிரணவக் குடில் படைத்த அரங்கனே
பிரணவ சித்திமிகு ராஜனே
சரவணச்சுடரேற்றி கலியுகத்தில்
சற்குருவாய் வழிநடத்தும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 07 நாள், 23.07.2022 சனிக்கிழமை)
வரமென அரங்கன் உன் கொள்கை வையகம் எங்கும் பரவி வர
தரணியே ஞான பலம் பெறும்
தரணி எங்கும் ஞான ஆட்சி மலரும்
3. மலருகின்ற அற்புதத்தை ஆறுமுகன் யான்
மகான் உன்வழி இனிதே நடத்தி வர
வளருகின்ற சமூகம் இனிவருங்காலம்
வள்ளல் தன்மை கூடி அரங்கன் உன் தயவாலே
4. தயவாலே சன்மார்க்க நெறிபிறழா
தரணிஎங்கும் மாற்றம் கூடி
நேயமுள ஞானவான்கள் சூழ்ந்த
நிலமதனில் ஞான ஆட்சியாக உருவாகக்கூடும்
5. கூடவே அரங்கன் உன் வழி ஆறுமுகன் யான் அற்புதத்தை நிகழ்த்தி வர
யுகமக்கள் ஓங்காரக்குடில் நோக்கி உடன்வந்து அரங்கன் ஆசி பெற
ஆசிபெற அனைத்தும் மாற்றமாகும் அரங்கன் தருகின்ற அருளமுது உண்ண
அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
6. ஆகவே அரங்கனைத் தொடர்ந்து
அரங்கனின் நெறிமுறைகளை ஏற்று
வரங்களாக உலகோர் இயங்கிவர
வையகத்தில் ஞான யுகமாற்றமாக சடுதி மாற்றங்காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–